முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் நந்தீஸ்வரர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

24.09.2018, திங்கட்கிழமை

1. **மனத்தீட்டு அகலா மாயைக்குள்**
**மனக்கவலை கொண்டு தவிக்கும் மனிதா**
**கனத்த ருண ரோக அல்லலால்**
**கவலை கொண்டு தவிக்கும் மனிதா**

2. மனிதா மாயை என்பதை உணர
மறுமை உண்டென தவறுகட்கு
இனிமேலும் அறிந்து தெளிய
ஏற்றுவா நல்குருமார்க்கத்தை என்று கூறி

3. கூறியே ஞான குருவாக வந்து
குவலயம் காக்கும் அரங்கன்
அருமை பெருமை உணர்ந்திட
அகிலத்தார்க்கு ஒளி சூட்சும நூலை

4. நூலை **விளம்பி நங்கை திங்கள்**
**நிலமதனில் அட்டதிகதி சோமவாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 8ம் நாள் 24.09.2018, திங்கட்கிழமை)**
**ஞாலமதில் முழுமதி நன்னாளில்**
**நாட்டிடுவேன் நந்தீஸ்வரர் யானும்**

5. ஞானமிலா உலகம் தனக்கென
நம்பகம் கொண்டு பொருளாசை வழி
ஊனமாக செல்லும் மக்களே
உலகில் தன்னை சோதித்து

6. சோதித்து உள்சோதி வென்று
சுத்த நெறிபட வாழ்ந்து பாருங்கள்
ஆதி அந்தமும் அழிவு என்பதில்லா
ஆத்ம பலமும் ஆன்ம ஞானமும் கண்டறிவர்

7. அறிவிலியாக சேர்த்தவைகளெல்லாம்
அகன்றோடும் அந்திமம் ஆக ஆக
தெரிவு சிந்தை தெளிவு கொள்ள
தேற்றம் பெறும் உங்கள் ஆன்மா

8. ஆன்ம பலம் அழிவை போக்கும்
ஆற்றலாக வந்த மகா குரு
சண்முகனார் சூட்சும சக்தியான
சற்குரு அரங்கனை கண்டு வணங்கி

9. வணங்கி குருவாக ஏற்று
வல்லமையான தீட்சை பெற்று வர
வணங்கவே சகல வினையும்
வருமுலகில் தொடரா அகலும்

10. அகலும் மன மாயைகளும்
ஆபத்தில்லா நெடிய பயணமாக
வகைபட அரங்கன் ஆசியால்
வருபவர்க்கு குருவருள் துணை நிற்கும்

11. நிற்குமே பரிபூரணம் ஆகவே
நீடித்து நிலைக்குமே பிறவி கடக்க
அற்புதம் பெற குருவருளை நாடி வாரீர்
அறிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் நந்தீஸ்வரர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

மனத்தீட்டு எனும் மனதின் அறியாமை இருள் அகலாது மாயைக்குள் அகப்பட்டு மனக்கவலை கொண்டு தவிக்கின்ற மக்களே தீராத கடன்சுமைகளாகவும், நோயும் பீடிக்கப்பட்டு அல்லல்பட்டு கவலை கொண்டு தவிக்கும் மக்களே, இவையெல்லாம் மாயை என்பதை உணரவும் மறுமை எனும் மறுபிறப்பு உண்டு என்பதும், நீங்கள் செய்யும் தவறுக்கு மறுபிறவி உண்டு, அதில் அதற்குரிய தண்டணையை அனுபவிக்க நேரும் என்பதையும் இனிமேலாகினும் அறிந்து தெளிவடைய வேண்டுமாயின் நல்ல குருவின் சற்குருவின் திருவடி பணிந்து குருமார்க்கத்தை ஏற்று கடைத்தேறிடலாம் என உலகமெலாம் கூறியே உலகை வழிநடத்திட ஞானகுருவாக வந்து முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்து இவ்வுலகை காத்து ரட்சிக்கின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருமைகளையும் பெருமைகளையும் உணர்ந்திடவே உலக மக்களுக்குகாக உலக நலன் கருதியே **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 8ம் நாள் 24.09.2018, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே நந்தீஸ்வரர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் நந்தீஸ்வரர்.

அறியாமையின் வசப்பட்டு இந்த பூமியும் பொருளும் நிலையானது, மனிதவாழ்வும் நிலையானது என்றே நம்பி இவையெலாம் தமக்காகவே படைக்கப்பட்டதுபோலே நம்பிக்கை கொண்டு பொருளாசையின் வழியில் சென்று மயங்கி பொருள் சேர்த்து வாழும் மக்களே மயக்கத்தை விட்டு வெளியே வாருங்கள்.

உலகினில் தன்னை சோதித்து தன்னுள் உள்ள ஜோதியையும் உணர்ந்து கண்டு தெளிந்து உள்ஜோதிதனை வென்று தூயநெறிபட வாழ்ந்து பாருங்கள். அவ்விதமே வாழும் அவரெல்லாம் ஆதிஅந்தம் இல்லாததும் அழிவும் இல்லாததும் ஆகிய ஆத்மபலத்தினையும் ஆன்ம ஞானத்தையும் கண்டறிவார்கள்.

அதைவிடுத்து அறியாமையில் மூழ்கி பொருள் பற்றினால் சேர்ந்த பொருளெல்லாம் அவர்களை விட்டு வயது ஆகஆக அகன்று ஓடிவிடும் என்பதையும் அறிந்திடல் வேண்டுமப்பா.

எதை தேர்வு செய்வது எதை பின்பற்றுவது என தெளிவான சிந்தை கொள்ள உங்களது ஆன்மா கடைத்தேற்றம் பெற்றிடும். உங்களது ஆன்மபலம் அழிவினை போக்கி காக்கும்.

உலகிற்கு வர இருக்கும் அழிவை போக்கி காக்கும் மகா ஆற்றலாக வந்த மகா குருவும் முருகப்பெருமானின் சூட்சும சக்தியாக வந்துதித்த சற்குரு ஆறுமுக அரங்கனை கண்டு வணங்கி அரங்கனை குலகுருவாய் ஏற்றுக் கொண்டு அரங்கரிடத்து வல்லமைமிக்க தீட்சை உபதேசங்களை அடைந்து அரங்கனின் தூயநெறிப்படி நடந்து வரவர, அரங்கமகா தேசிகனை வணங்கி வரவர, சகலவிதமான வினைக்குற்றங்களும் வருங்காலங்களில் அவர்களைப் பற்றி தொடராமல் அகன்று ஓடும்.

அரங்கனை குருவாய் ஏற்று கொண்டவர்களுக்கு அவர்களைப் பற்றிய மனமாயைகளும் விலகி ஞானப்பயணமானது ஆபத்தில்லாத நெடிய பயணமாக ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆசியால் அமைந்து வகைபட நடந்திட செய்து அவர்களுக்கு குருவருள் துணையாக நின்றிடும்.

குருவின் அருள் அன்பர்தமக்கு பரிபூரணமாக சார்ந்து நிற்கும். குருவின் அருள் நீடித்து நிலைக்கும். குருவின் அருள் பிறவித் துன்பத்தையும் கடந்து செல்ல வகை செய்யும், ஆதலினால் உலக மக்களே நீங்களெல்லாம் அற்புதம் பெற்றிட வேண்டுமாயின் உத்தம மகா ஞானகுரு ஆறுமுக அரங்கமகா தேசிகனை நாடி உடன் விரைந்து வாருங்கள் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலிற்கு என உலகறிய உரைக்கின்றார் மகான் நந்தீஸ்வரர்.

–சுபம்–